பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(25.11.2015 முதல் 29.11.2015 வரை)
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101
போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881

==================================================================

தேதி :24.11.15

கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (20.11.2015 - 23.11.2015)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 78.8 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 26 – 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 23 – 24 |
| மேக மூட்டம் | 6 – 8 |
| ஈரப்பதம் (%) | 91 – 93 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 7 – 17 |

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 25/11/15 | தேதி-2 26/11/15 | தேதி-3 27/11/15 | தேதி-4 28/11/15 | தேதி-5 29/11/15 |
| மழை (மி.மீ) | 5 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 29 | 29 | 29 | 30 | 29 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ) | 22 | 20 | 19 | 21 | 22 |
| மேக மூட்டம் | 4 | 2 | 1 | 2 | 5 |
| ஈரப்பதம் (%) | 67 – 93 | 62 – 83 | 45 – 83 | 51 – 89 | 64 – 84 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 14 | 13 | 11 | 13 | 14 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | தென்கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

25.11.15 முதல் 29.11.15 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 5 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**சம்பா : தண்டு உருளும் பருவம் ; தாளடி: இளம் பயிர் மற்றும் தூர் வெடிக்கும் பருவம்**

- மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- சம்பா நெற்பயிரில ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 25 கிலோ யூரியா + ஜிப்சம் 18 கிலோ + வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து தண்ணீர் வடிந்த உடன் வயலில் இடவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- சம்பா நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 500 மி.லி./ ஏக்கர் அல்லது புரபனோபாஸ் 50 இ.சி. ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
  சம்பா நெற்பயிரில் புகையான் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நெல்வயலில் பட்டம் பிரித்து தண்ணீர் வடித்து காற்றோட்டத்தை ஏற்ப்படுத்துவதன் மூலம் புகையான் தாக்குதலலிருந்து பயிர்களை பாதுகாக்கலாம். இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 40 கிராம் தயோமித்தாக்சாம் அல்லது ஃபுப்ரோபைசின் 25 எஸ்.சி. 320 மில்லி/ஏக்கர் என்ற மருந்தினை தூர் பகுதி நன்கு நனையும்படி தெளிக்கவும்.

**இயக்குநர்**